பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 02 வெள்ளிக்கிழமை 16.01.2026 | அதிர்வு 170

## 3 சிறுவர்கள் உயிரிழப்பு!

### பேசாலைக் கடலில் பரிதாபம்



(மன்னார் நிருபர்)

மன்னார், பேசாலைக் கடலில் நீராடச் சென்ற நால்வரில் 3 சிறுவர்கள்

06▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மீண்டும் இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

## யாழில் இன்று ஜனாதிபதி அநுர சபதம்





(எஸ். நிதர்ஷன்)

"இலங்கையில்மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கு சிலர் முற்படுகின்றனர். அதற்கு இடமளிக்கமாட்டோம். இனவாதம் நிச்சயம் தோற்கடிக்கப்படும்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்டு வீடுகளின்றித் தவிக்கும்

06▶

## தன்னைச் சந்திக்கவில்லை எனக் குறைபட்ட விகாராதிபதி: நேரில் சந்தித்துக் காலில் விழுந்து ஆசி பெற்ற ஜனாதிபதி!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நயினாதீவுக்கு இன்று சென்று நாக விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி தன்னிடம் நேரில் வரவில்லை என அண்மையில் நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி அதிருப்தி தெரிவித்திருந்த

06▶





## வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டோருக்கு

# புதிய வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்டு வீடுகளின்றித் தவிக்கும் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் விசேட வேலைத்திட்டம் இன்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'தமக்கென ஒரு இடம் – அழகான வாழ்க்கை' என்ற தொனிப்பொருளின் கீழ், நாடு முழுவதும் 31 ஆயிரத்து 218 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி – மீசாலை கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவரின் வீட்டுக்கான அடிக்கல், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில், குறித்த பயனாளியின் குடும்பத்தாரால் நடுகை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற பிரதான நிகழ்வில், பயனாளிகளுக்கான வீட்டு மானியக் காசோலைகள் ஜனாதிபதி முன்னிலையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும் கலந்து கொண்டார்.

நீண்டகாலமாகத் தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்து வரும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும், அவர்களுக்குப் பாதுகாப்பானதொரு எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கிலும் இந்த வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் எல்.பி.குமுது லால் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் கலாநிதி எச்.எம்.சுசில் ரணசிங்க மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி

தொடர்ச்சி▼















தொடர்ச்சி▲

அநுரகுமார திஸாநாயக்க சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம.பிரதீபன், மாவட்ட செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பயனாளிகள் மற்றும் பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.
















# நயினை அம்மனையும் வழிபட்ட ஜனாதிபதி

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

நயினாதீவுக்குக் ஹெலியில் சென்ற ஜனாதிபதி, நாக விகாரையில் விசேட வழிபாடுகளை மேற்கொண்டு, விகாராதிபதியின் காலில் விழுந்தும் ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்துக்கும் ஜனாதிபதி சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.









# விடைபெறும் அமெரிக்கத் தூதுவர் சஜித்துடன் இன்று முக்கிய பேச்சு

தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சாங், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வைச் சந்தித்தார்.

தனது இராஜதந்திர பதவிக் காலச் சேவை நிறைவடைந்து நாட்டிலிருந்து விடைபெற்றுச் செல்லும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ஜுலி சாங், இன்று காலை கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவரது பதவிக் காலத்தில், இரு நாடுகளின் உறவுகளைப் பல்வேறு துறைகள் ஊடாக வலுப்படுத்துவதற்கும், முன்னேற்றம் காணச் செய்வதற்கும், வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் எடுத்த முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மிக அண்மைக் காலங்களில் இலங்கை எதிர்கொண்ட அசாதாரண துயர் சம்பவங்களின் போது இலங்கைக்கு மனிதாபிமான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அமெரிக்கா ஊடாகப் பெற்றுத் தந்த ஒத்துழைப்புகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.









# திருமலையில் அரச எம்.பியின் அழுத்தத்தாலேயே தேரர்கள் உட்பட பொதுமக்கள் சிறையில் அடைப்பு

## அவர்களை இன்று பார்வையிட்ட பின் விமல் வீரவன்ச இப்படிக் குற்றச்சாட்டு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அழுத்தம் காரணமாகவே தேரர்கள் உட்பட பொதுமக்கள் சிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இன்று திருகோணமலையில் வைத்து தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

திருகோணமலை விளக்கமறியல் சாலையில் வைக்கப்பட்டுள்ள வனவாசி பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உட்பட 4 தேரர்களை இன்று பார்வையிட்ட பின்னர் விமல் வீரவன்ச மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

"கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் திணைக்களம் மீது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அழுத்தம் மேற்கொண்டுள்ளார். தற்போது அவர் தந்திரமாக விலகிவிட்டார். ஆனால், திணைக்களம் தனித்து விடப்பட்டுள்ளது." – என்றும் அவர் மேலும் கூறினார்.




## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**3 சிறுவர்கள்...**

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

தைப்பொங்கல் பண்டிகை நாளான நேற்று மேற்படி 4 பேரும் கடலில் நீராடுவதற்காகச் சென்றுள்ளனர்.

அவர்களில் சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததுடன் மற்றைய இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

இதேவேளை, ஒருவர் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.



இந்தநிலையில் காணாமல் போயிருந்த சிறுவனின் சடலம் நேற்று இரவு கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 16 முதல் 18 வயதுடைய பேசாலை, வசந்தபுரம், உதயபுரம் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**தன்னைச் சந்திக்கவில்லை...**

நிலையில், இன்று ஜனாதிபதி விகாராதிபதியைச் சந்தித்து ஆசி பெற்றார்.

அதேவேளை, தையிட்டி திஸ்ஸ விகாரைப் பொறுப்பை தன்னிடம் தந்தால், விகாரை அமைந்துள்ள சுமார் 1.2 ஏக்கர் தனியார் காணிகளுக்கு மாற்றீடாக, தையிட்டி விகாரைக்குச் சொந்தமான காணிகளில் மாற்றுக் காணிகளை வழங்கி தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கத் தயார் என நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்துடன், தையிட்டிப் பகுதிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களை நேரில் சந்தித்தும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





**மீண்டும் இனவாதம்...**

2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் விசேட வேலைத்திட்டம் இன்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம், சாவகச்சேரி – மீசாலையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "போரின்போது வடக்கில் பல வீடுகள் சேதமடைந்தன. இவ்வாறு சேதமடைந்த வீடுகள் இன்னும் முழுமையாக மீளமைக்கப்படவில்லை.

போர்க் காலத்திலும் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். தற்போதும் இடம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலை. தமக்கென வீடொன்று இன்மையே இதற்கு பிரதான காரணமாகும்.

எனவே, போரால் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் வீடில்லாப் பிரச்சினைக்கு எமது ஆட்சியின் கீழ் தீர்வு காணப்படும்." – எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எம் மீது நம்பிக்கை வைத்தே வடக்கு மக்கள் வாக்களித்தார்கள். அந்த நம்பிக்கையை சிதைக்கும் வகையில் நாம் செயல்படமாட்டோம். ஏனெனில் இது மக்களுக்கான அரசாங்கமாகும்.

அதேவேளை, இனவாதம் என்பது இந்நாட்டுக்கு அழிவையே தந்துள்ளது. இதன்மூலம் எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மக்கள் மத்தியில் துயரங்களே குவிந்தன.

தற்போதும் அரசியலுக்காக இனவாதப் பிரச்சினையை தோற்றுவிப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். நாம் இனவாதத்துக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதிர்ச்சி தரும் குடி

இலங்கைத் தமிழர்களின் அரசியல், மதுபான சாலை உரிமம் ('பார் லைசன்ஸ்') வழங்கப்பட்ட விடயத்தை ஒட்டிய சிக்கலில் சின்னாபின்னமாக்கபட்டிருக்கும் நிலையில், உண்மையிலேயே மதுபான சாலைகள் சம்பந்தமான அதிர்ச்சி தரும் தகவல் கொழும்பில் வெளியாகி இருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் மதுபான சாலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ள பின்னணியில் இந்தப் பாதிப்புத் தகவல் வெளிவந்திருக்கின்றது

இலங்கையில் மதுபானப் பயன்பாடு காரணமாக நாளொன்றுக்கு சுமார் 50 பேர் உயிரிழக்கின்றனர் என மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் அதிர்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற 'மதுபானம் குறித்த உண்மைகளும் கட்டுக்கதைகளும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பும்'என்ற தலைப்பிலான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் டி சேரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் மதுபானம் மற்றும் புகையிலைப் பயன்பாடு காரணமாக ஆண்டுதோறும் 15,000 முதல் 20,000 பேர் வரை உயிரிழக்கின்றனர் எனறார்.

வீதி விபத்துக்கள், புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்களால் ஏற்படும் மரணங்களின் மொத்த எண்ணிக்கையை விடவும், மதுபானத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. சட்டபூர்வமான மற்றும் சட்டவிரோத மதுபானங்கள் ஆகிய இரண்டுமே இந்த உயிரிழப்புகளுக்குப் பிரதான காரணிகளாக அமைகின்றன என அவர் சுட்டிக் காட்டினார்.

புகைத்தல் மற்றும் மதுபான பாவனை தொற்றா நோய்களால் ஏற்படும் இறப்புகளுக்கு முக்கிய காரணங்களாகின்றன. சட்டவிரோத மதுபான பாவனையும் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இது இறப்பு விகிதத்தை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

அதேவேளை, மதுபானக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பெரும் சவாலாக இருப்பது அரசியல்வாதிகளுக்கும் மதுபான நிறுவனங்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு என்று புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பலருக்கு மதுபான உற்பத்தி நிலையங்கள் அல்லது விற்பனை நிலையங்களின் உரிமம் இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

அரசியல் பலத்தைத் தக்கவைக்க மதுபான நிறுவனங்களின் நிதி பயன்படுத்தப்படுவதாகவும், நிறுவனங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட அரசியல்வாதிகள் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆயினும் நாட்டில் மது அருந்துபவர்களில் ஏறத்தாழ 37 சதவீதம் பேர் சட்டவிரோத மதுபானங்களை உட்கொள்கின்றனர் என ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளரை மேற்கோள்காட்டியும், சட்டவிரோத மதுபானப் பயன்பாடு முந்நூறு வீதத்தினால் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டு வெளியான செய்திகள் முற்றிலும் அடிப்படையற்றவை என்று இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டவை சற்று ஆறுதல் தரும் விடயங்களாகும்.

**வி.பிரசாத்**
(3 ஆம் வருடம் ஊடகக் கற்கைகள்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)



# நிலத்தடி நீரும் யாழ்ப்பாணமும்

யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் வடகோடியில் அமைந்துள்ள ஓர் மாவட்டமாகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பகுதியையும் அதிலுள்ள பல தீவுகளையும் உள்ளடக்கியது. அதன் எல்லைகளாக வடக்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் இந்தியப்பெருங் கடல் உள்ளது. தெற்கில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியும் கிளிநொச்சி மாவட்டமும் அமைந்துள்ளன.

இங்கு நிரந்தரமான ஆறுகள், நீர்த்தேக்கங்கள் என எதுவும் இல்லாத நிலையில் சுமார் 6 இலட்சம் மக்கள் குடிதண்ணீர், விவசாயம் தொழிற்துறைத் தேவைகள் முழுவதற்கும் நிலத்தடி நீரையே பிரதானமாக நம்பியுள்ளனர்.

இந்த நிலத்தடி நீர்வளம் சுண்ணாம்புப் பாறைகள் கொண்ட தனித்துவமான பாறை அமைப்பின் கீழே மழைநீர் சேகரிக்கப்பட்டு கடல்நீரின் மேலே ஒரு நன்னீர்ப் படலம் போல் மிதந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிதண்ணீர்த் தேவையும் அதிகரித்துள்ளது. ஆனால் நிலத்தடி நீர்த் தட்டுப்பாடு , உவர்நீர் ஊடுருவல் மற்றும் நிலக்கீழ் நீர் மாசடைதல் போன்ற காரணத்தால் சுத்தமான குடிதண்ணீருக்கான தேவை அதிகரித்துள்ளது.

முன்னர் ஒரு வீட்டிற்குச் சென்றால் உடனே ஒரு செம்பில் கிணற்றில் இருந்து பெறப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படும். தற்காலத்தில் அது மாறி போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரும் யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் நிலையமுமே காணப்படும் நிலைமைக்கே மாறிவிட்டது. அது மாத்திரமல்லாது யாழ்ப்பாணத்தில் அதிகமான நீர்ப்பாசனம் தேவைப்படும் வெற்றிலை, புகையிலை, வெங்காயம் போன்ற பயிர்ச்செய்கையும் இடம்பெறுகின்றன. இதனால் அதற்கான நீரைப் பெறுவதற்காக ஆழமான குழாய்கள் மூலம் நீரை உறிஞ்சி எடுக்கின்றனர். இதனால் கடல் நீர் இலகுவாக உள்நுழைய முடிவதுடன் மேற்பரப்பு நீரும் வற்றிப்போகின்றது.

அது மாத்திரமல்லாது, வீடுகள் மற்றும் வீதிகளில் சீமெந்துத்தரை அமைத்தல் ஒரு நாகரீகமாக மாறி வருகின்றது. இதனால் மழைநீரை இலகுவாக நிலத்தின் கீழ் ஊடுருவி மீள்நிரப்ப முடியாத நிலையும் ஏற்படுகின்றது. அத்தோடு விவசாய நிலங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படும் உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் சுண்ணாம்புப் பாறைகள் ஊடாக இலகுவில் நிலத்தடி நீரில் கலந்து விடுகின்றன. இதனால் குடிதண்ணீரில் நைட்டிரேட் (Nitrate) போன்ற நச்சு இரசாயனங்கள் அளவு அதிகரிக்கின்றன.

அதேசமய்ச்ம் பாதுகாப்பற்ற மலசலகூடக் கட்டமைப்பு மற்றும் நகரப்பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் என்பன நிலத்தடி நீரில் கலந்து நுண்ணியல் மற்றும் இரசாயன மாசடைவை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக சுன்னாகம் அனல்மின் நிலையத்தில் இருந்து கசிந்த கழிவு எண்ணெய் நிலத்தடி நீருடன் கலந்தமை ஒரு பரவலாக அறியப்பட்ட பாரிய மாசடைவாகும்.

இந்த நிலத்தடி நீர் நிலைத்திருப்பதற்காக சில தீர்வுகள் காணப்படுகின்றன. அவை கவனிக்கத்தக்கவை. மறைந்த பொறுயியலாளர் ஆறுமுகம் அவர்களால் முன்வைக்கப்பட்ட தொண்டைமானாறு, வழுக்கையாறு, உப்பாறு போன்ற நன்னீர் ஏரித்திட்டங்களை செயற்படுத்தல். இது கடல்நீர் ஊடுருவுவதைத் தடுப்பதுடன் மழைநீரைச் சேமித்து நிலத்தடிநீர் மட்டத்தை உயர்த்தவும் வழி செய்யும். அத்தோடு யாழ்ப்பாணத்தில் காணப்படும் – நிலத்தடி நீரைப்போசித்த – பொதுக்குளங்கள் மற்றும் வயல் நிலங்களில் காணப்படும் சிறு குளங்களை ஆழமாக்கி புனரமைத்தல் மூலமும், பாரிய அளவிலான விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீரை தூவல் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் ஆழமான கிணறுகள் அமைக்கும் கட்டாயத்தைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதும் அதனைப் பேணிப்பயன்படுத்துவதும் அரசின் பொறுப்பு மட்டுமல்லாது அங்கு வாழும் ஒவ்வொரு பிரஜைகளினதும் கடமையாகும். இவ்வாறு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இரணைமடுக்குளம் மற்றும் தாளையடி குடிதண்ணீர் நன்னீராக்கும் திட்டம் போன்ற திட்டத்திற்கு கையேந்தி நிற்க வேண்டிய அவசியமின்றி யாழ்ப்பாணத்தில் அருகிவரும் நிலத்தடிநீரை உரிய முகாமைத்துவ மூலோபாயங்கள் மூலம் பேணி, அரிதான இந்த வளத்தை வருங்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க முடியும்.







# ‘நம் தாயகம்’ உற்பத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழா!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள ‘நம் தாயகம்’ உற்பத்தி நிலையத்தில் நேற்று தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

முன்னாள் போராளிகள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் ஆகியோரின் பொருளாதாரத்தை மேம் படுத்தும் நோக்கில் ”நம் தாயகம்” உற் பத்தி நிலையம் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





# கிழக்கில் பெண்கள் அபிவிருத்திக்கான நிதியுதவித் திட்டம் தொடர்பில் கலந்தாய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அபிவிருத்தி மற்றும் அரசியல் பங் கேற்பை மேம்படுத்தும் யு.என்.டி.பி. நிதி யுதவி திட்டம் தொடர்பாகக் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அபிவிருத்தி மற்றும் அரசியல் பங் கேற்பை மேம்படுத்துவது தொடர்பான நிகழ்வு திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்ட குஇந்த நிகழ்வை ஐக்கிய நாடுகள் அபிவிருத்–தி திட்டத்தின் யு .என்.டி.பி. நிதி உதவி யுடன் Search for common Ground மூலமாக நடை முறைப்படுத்தப்படு கிறது.

இதில் வளவாளராக எம்.ஐ.எம்.சதாத், திட்ட வசதிப்படுத்துனராக துர்கா புலேந் திரன், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் ஜெரோமி ரொமைன் ராஜெல் மற்றும் பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணம் முழுவதும் 10 அரை நாள் கொண்ட கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின் றன. இதில் பெண் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வெடிபொருள் அகற் றும் தொழிலாளர்கள், மற்றும் அரச அதிகாரிகள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு பெண்களின் அரசியல், சமூக மற்றும் தீர்மானம் எடுக்கும் செயற்பாடு களில் அர்த்தமுள்ள பங்கேற்பை வலுப் படுத்துவதற்கான நடைமுறைத் தீர்வு களை ஆராயும் ஒரு பாதுகாப்பான மற்றும் கூட்டுறவான ஒரு தளத்தை இது வழங்குகின்றது.



# பத்து நிமிடம் மழை பெய்தால் போதும் வெள்ளம் தேங்கும் பெண்கள் சந்தை!

(பாறுக் ஷிஹான்)

பத்து நிமிடம் மழை பெய்தால் போதும் வெள்ள நீர் தேங்கும் பிரதேசமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பெண்கள் சந்தை காணப்படுகிறது.

தற்போது மட்டுமல்ல பருவ காலத்தில் கூட அடிக்கடி வெள்ள நீரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் சந்தைப் பகுதியாகவும் இந்தச் சந்தையை சூழ உள்ள மாநகர சபைக்கு உட்பட்ட உள் வீதிகளும் வெள்ள நீரில் மூழ்குவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலையில் சந்தைக்கு வரும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் இந்தச் சந்தையைச் சுற்றி உள்வீதிகளில் காணப்படும் வடிகான்கள் நீண்ட காலமாக தூர்வாரப்படாமையால் நீர் தேங்கி வெள்ள நிலைமை ஏற்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

இது தவிர குறித்த சந்தை மேற்கூரையும் எவ்வித கவனிப்பாரற்று காணப்படுவதால் பழுதடைந்து உடைந்து விழும் நிலையில் உள்ளது.

அத்துடன் சந்தைப் பகுதிக்கு தொடர்ச்சியாக வெள்ளம் தேங்கி நிற்பதால் துர்நாற்றமும் வீசுவதுடன் சுகாதார அச்சுறுத்தலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







# பட்டத் திருவிழாவும் நவீன கால இளைஞர்களும்!



ரம்மியா புஸ்பகரன்
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

"என் பட்டமே பற பற... எல்லைகள் தாண்டி பற பற..." என்று பாட்டில் மட்டுமே பட்டம் பற்றிக் கூறப்படவில்லை. நிஜத்திலும் பல வண்ணப் பட்டங்கள் இன்றுவரை பறக்க விடப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வயதெல்லை பாராமல் பட்டம் ஏற்றுவார்கள். அந்தளவுக்குப் பட்டம் அனைவரையும் தன்னுள் ஈர்த்து வைத்திருக்கின்றது. வெயில், மழையைத் தாண்டி காற்றடிக்கும் பருவநிலையைத்தான் பட்டம் ஏற்றி விளையாடுவதற்கு அனைவரும் தேடிக் கொள்வார்கள். செய்தித்தாள், நூல், மாப்பசை, ஈர்க்கு என்பவை இருந்தாலே சாதாரண பட்டம் கட்டுவதற்குப் போதுமானது. வயல்வெளி, கடற்கரை வெளி என்பன பட்டம் ஏற்றுவதற்கு வசதியான இடங்கள் எனலாம். யாருடைய பட்டம் உயரப் பறக்கும், யாருடைய பட்டம் வானில் தொடர்ந்து பறக்கும் பார்ப்போம் என்று சவால் விட்டு ஏற்றிக் கொள்வார்கள்.

ஆனால் அதெல்லாம் ஒரு காலம் தான். இன்றைய காலச் சிறுவர்களுக்கு இவற்றின் மீதான நாட்டம் சற்றுக் குறைவானதாகவே காணப்படுகின்றது. நெருக்கமான குடியிருப்புகள், காலை, மாலை,இரவு என எல்லா நேரமும் வகுப்புகள் என அவர்களை முடக்கி வைத்திருக்கின்றது. உண்மையில் பட்டம் கட்டுவது முதல் ஏற்றுவது வரை பல திறன்கள் வளர்த்துக் கொள்ளப்படுகின்றன. படைப்பாக்கம், குழுச் செயற்பாடு, பொறுமை, ஒற்றுமையுணர்வு போன்ற பல திறன்கள் வளர்த்துக் கொள்ளப்படுகின்றன.

இவை இருந்தால் தான் பட்டத்தை வெற்றிகரமாக ஏற்றிக் கொள்ள முடியும். யாழ்ப்பாணத்தில் எந்த இடத்தில் பட்டம் ஏற்றுவது பிரபல்யமானது? என்று கேட்டால், அனைவரும் கூறுவது "வல்வெட்டித்துறை" என்று தான். அந்த அளவுக் குப் பிரபல்யமான

இடமாகக் காணப்படுகின்றது. இதையும் தாண்டி வடமராட்சிப் பகுதிகளிலும் பட்டமேற்றுவார்கள். முப்பரிமாணத்தில் அமைந்த பட்டங்கள், ராட்சத பட்டங்கள் என எங்கும் காண முடியாத பல வகையான பட்டங்களை இங்குதான் காணலாம்.

தைப்பொங்கலன்றுதான் வல்வெட்டித்துறை இன்னும் பிரபல்யமாக இருக்கும். வேகமாகப் பொங்கலைப் பொங்கி விட்டு எல்லோரும் வல்வெட்டித்துறையை நோக்கித்தான் செல்வார்கள். எல்லா இடங்களிலிருந்தும் அங்கு பட்டத் திருவிழாவைப் பார்ப்பதற்கு வருகை தருவார்கள். உள்நாட்டவர்கள் முதல், வெளிநாட்டவர்கள் வரை அனைவரும் பல வண்ணப் பட்டங்களைப் பார்ப்பதற்கு வருகை தருவார்கள்.

"பட்டப்போட்டி முடிந்து விட்டதா? யாருடைய பட்டம் முதல் பரிசு பெற்றது ?" என்ற வினாக்களோடு பரபரப்பாக வந்து சேர்வார்கள். அன்றைய தினம் போட்டியாளர்கள் தமது படைப்பாக்கங்களை அனைவரது முன்னிலையிலும் காட்சிப்படுத்துவார்கள். உண்மையிலே சற்று வியக்க வைக்கும். எத்தனை வகையான பட்டங்கள், எப்படி இதனை செய்திருப்பார்கள் என்று பார்ப்பவர்களை எல்லாம் சற்று வியக்க வைக்கும்.

ஆரவாரங்களுக்கு மத்தியிலும், கால் வைக்க இடமில்லாத சன நெரிசலுக்கு மத்தியிலும் பட்டத் திருவிழா பரபரப்பாக ஆரம்பமாகும். இதற்காக அவர்கள் பல மணி நேரத்தைச் செலவிட்டிருப்பார்கள்.

ஆனால் இன்றைய கால இளைஞர்களிடத்தில்

தொடர்ச்சி▼



# பட்டத் திருவிழாவும் நவீன கால இளைஞர்களும்!

**தொடர்ச்சி▲**

பட்டத் திருவிழா பற்றிய அணுகுமுறை எவ்வாறு இருக்கின்றது என்று பார்த்தால், பிரபல்யம் அடைய வேண்டும் என்ற மனப்பான்மையே காணப்படுகின்றது. தமது பட்டத்தைப் பற்றி எல்லோரும் பேச

வேண்டுமென எண்ணுகின்றார்கள். பட்டத்தோடு ஆட்களும் சேர்ந்து பறப்பது என்பது சாதாரணமான விடயம் தான். அதிலும் குறிப்பாக ராட்சத பட்டங்களோடு பறப்பது இன்னும் சாதாரணமானது. சமூக வலைத்தளங்களின் வளர்ச்சியால் இவை பெரும் பேசுபொருளாகவே மாறியிருக்கின்றன. “2021 ஆம் ஆண்டு ஒருவர் பட்டத்துடன் சேர்ந்து பறந்திருந்தார்”. சமூக வலைத்தளத்தைத் திறந்தால் குறிப்பிட்ட வாரத்துக்கு அந்த இளைஞர் பற்றிய நேர்காணல்களும், செய்தியுமாகவே இருந்தது. அடுத்தடுத்த பட்டத் திருவிழாக்களில் தாமும் பட்டத்தோடு பறந்தால் பிரபல்யமாகலாம் என்ற மனநிலையோடு செயற்படுகின்றனர். உண்மையில் பட்டம் ஏற்றுவது என்பது ஒரு கலை. அதை வெறுமனே ஒரு போட்டியாக மட்டுமே பார்க்கின்றார்கள். பட்டம் கட்டுவதில் ஒவ்வொருவருக்மென தனித்துவமும், நுட்பமும் காணப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் அவற்றை வியாபார நோக்கத்துக்காக மாத்திரமே பயன்படுத்துகின்றனர். வெற்றி, தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு என்பது சற்று குறைவானதாகவே காணப்படுகின்றது. தமக்கு இடம் கிடைக்கவில்லை என்றால் முரண்பாட்டில் ஈடுபடுவதற்கும் தயங்குவதில்லை, ஆபத்தான நூல் வகைகளையும் பயன்படுத்துகின்றனர், கூட்டத்தில் குழப்பங்கள் நிகழ்கின்றன, இவர்கள் செய்யும் சில சாகசங்கள் ஆபத்தையும் ஏற்படுத்துகின்றன.

உண்மையில் பாரம்பரியமான விளையாட்டுகள் எப்பொழுதும் சமூகத்தின் பண்பாட்டு நினைவுகளைக் காப்பதற்கு வலுச் சேர்க்கும். பல விடயங்கள் வெறுமனே நினைவுகளாக மாத்திரமே காணப்படுகின்றன. அவற்றை நினைக்கும் பொழுது சற்று வேதனை அளிக்கின்றது. எம்மிடம் இருக்கும் பாரம்பரியமான விடயங்கள் அழிந்திடாமல் காப்பதும் ஒரு வகையில் நல்லது தான். அதன்படிதான் இந்தப் பட்டமேற்றுகின்ற நிகழ்வும் அடியோடு அழிந்து விடாமல் வருடத்தில் ஒரு முறையாவது நினைவு கூறுவது உண்மையில் மகிழ்ச்சி அளிக்கிறது. அதனை சரியான விதத்தில் பயன்படுத்துவது என்பது ஒவ்வொருவரது மனநிலையையும் பொறுத்தது.





# நிந்தவூர் சுகாதார பிரிவில் உணவுகள் பரிசோதனை

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி டாக்டர் ஜே.சிவசுப்ரமணியம் தலைமையில், நிந்தவூர் 3 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட அரச ஸ்தாபனங்கள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நோய் தடுப்பு பரிசோதனை இன்று மேற்கொள்ளப்பட்டது.



இதன்போது, டெங்கு பெருகக் கூடிய இடங்கள் உள்ளனவா என ஆராயப்பட்டது. அவற்றை அகற்றுவது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. மேலும், பல்வேறு வேலைத்தளங்களில் சுகாதார நிலைமைகள் ஆய்வு செய்யப்பட்டு, குறைபாடுகள் காணப்பட்ட இடங்களில் உடனடி சீரமைப்பு மேற்கொள்ளுமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அதேவேளை, வீதியோர கடைகள் மற்றும் உணவகங்களில் உணவு சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உணவுப் பொருட்களின் தரம், சேமிப்பு முறை, சுற்றுப்புற சுத்தம் மற்றும் உணவு கையாளும் நடைமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. சுகாதார விதிமுறைகளை மீறிய இடங்களுக்கு தேவையான எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன.

பொது மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில், இவ்வாறான பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், டெங்கு நோய் பரவலைத் தடுப்பதற்கும், உணவு சுகாதாரத்தை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# நட்டாற்றில் பாறையில் முதலை!



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கோமாரி பிரதான வீதியில் ஆற்றையும் கடலையும் இணைக்கும் பாலத்தின் கீழ் நட்டாற்றில் உள்ள பெரும் பாறையில் பாரிய முதலை ஒன்று காணப்பட்டுள்ளது.

இதனை மக்கள் பார்வையிட்டுள்ளனர். முதலைகளின் அச்சத்தில் இந்தப் பகுதி மக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.






# கொழும்பு சாரணர் இயக்கத்தின் தைப்பொங்கல் விழா நிகழ்வுகள்

(றிபாஸ்)

67ஆவது கொழும்பு சாரணர் இயக்கத்தின் தைப்பொங்கல் விழா மரீயம் பெண்கள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

குழு சாரணத் தலைவர் துவான் பஸீல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட சாரண ஆணையாளர் சம்பத் விஜேயசிங்க, பாடசாலை அதிபர் சியானா மர்சூக் உட்பட குருளைச் சாரணத் தலைவர்கள், சாரணர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# வங்காலையில் சிரேஷ்ட விவசாயிகள் கௌரவிப்பு

( வாஸ் கூஞ்ஞ)

தைபொங்கலை முன்னிட்டு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்பணி லக்கோன் அடிகளார் தலைமையில் வங்காலை விவசாயிகள் அமைப்புக்கள் கத்தோலிக்க இளைஞர்கள் மற்றும் பங்கு மேய்ப்பு சபையினரின் ஏற்பாட்டில் பொங்கல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன் சிரேஷ்ட விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்.

வியாழக்கிழமை காலை பங்குத் தந்தை அருட்பணி லக்கோன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து பொங்கல் பரிமாறல் விவாயிகள் கௌரவிப்பு என பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றது.

இதில் வங்காலையில் இயங்கி வரும் வங்காலை விவசாய அமைப்பு, ஞானி ஆலங்குள விவசாய அமைப்பு, துவரங் கேணி விவசாய அமைப்பு, ஆலங்குள விவசாய அமைப்பு, கங்கங்குள விவசாய அமைப்பு மற்றும் பாப்பாங்குள விவசாய அமைப்புக்களின் சிரேஷ்ட விவசாயிகள் பத்து பேருக்கு பொன்னாடை போர்க்கப்பட்டு அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு அவ்வூர் மக்களால் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்ட மூத்த விவசாயிகளான றெ.மோசேஸ் றெவ்வல், சூ.பிரான்சீஸ் மார்க், கி.இசிதோர் சோசை, ச.யூலியூ லெம்பேட், கா.அகஸ்டின் சோசை, அ.கிறிஸ்டியான் பீரிஸ், அ.கொன்சிலஸ் குரூஸ், பி.நித்தியானந்தன் குரூஸ், ப.யேசுதாசன் மிராண்டா, சூ.ஆரோக்கியம் மார்க் ஆகிய சிரேஷ்ட விவசாயிகளே கௌரவிக்கப்பட்டனர்.







# மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி; 1,000 காளைகள், 600 வீரர்கள் பங்கேற்பு

தைத்திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு கோலாகலமாக இன்று காலை 9 மணி அளவில் தொடங்கியது. இதில் 1,000 இற்கும் மேற்பட்ட காளைகளுடன், 600 இற்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பல்வேறு ஊர்களில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இதில் மதுரை மாவட்டத்தில் உள்ள அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் உலகப்புகழ் பெற்றவை. இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தை முதல் நாளான நேற்று, அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி சிறப்பாக நடந்து முடிந்தது.

இந்நிலையில், இன்று காலை பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது. மாடுபிடி வீரர்களின் உறுதிமொழியுடன் பாலமேடு ஜல்லிக்கட்டு ஆரம்பமானது. போட்டியின் தொடக்கமாக கோயில் காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன. அதை தொடர்ந்து முதல் சுற்று தொடங்கியது. முதல் சுற்றில் 100 காளைகளுடன்.



50 மாடுபிடி வீரர்களும் களம் கண்டனர். அதிக காளைகளை அடக்கும் வீரர்களின் விவரத்தை அறிய களத்தில் டிஜிட்டல் பதாகையும் அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சுற்றுகளாக பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சுற்றிலும் பங்கேற்கும் மாடுபிடி வீரர்களுக்கு வெவ்வேறு வண்ணத்திலான சீருடை அணிந்து பங்கேற்கின்றனர். ஜல்லிக்கட்டு போட்டி தொடங்குவதற்கு முன்னதாக காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னரே போட்டியில் பங்கேற்க காளைகளும், வீரர்களும் அனுமதிக்கப்பட்டனர். இந்த போட்டியில் விதிமுறைகளை மீறுபவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியை காண உள்ளூர், வெளியூர், வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பார்வையாளர்கள் பலர் பாலமேட்டில் முகாமிட்டுள்ளனர். போட்டியில் சிறந்து விளங்கும் காளை மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட உள்ளது. பாலமேடு ஜல்லிக்கட்டு போட் டியை முன்னிட்டு பொலிஸ் சார்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. களத்தில் காயமடையும் காளைகள், மாடுபிடி வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்க மருத்து வக் குழுவினரும் தயார் நிலையில் உள்ளனர்.

# தி.மு.க. ஆட்சி எப்போது போகுமென தமிழ்நாடு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்

## பொங்கல் விழாவில் பழனிசாமி உரை

"எங்களது கூட்டணி வலிமையான கூட்டணி. சில கட்சிகள் வரும், இவற்றையெல்லாம் பகிரங்கமாக கூற முடியாது. வலிமையான கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தலை சந்திக்க இருக்கிறோம். தி.மு.க. ஆட்சி எப்போது போகும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்."

- இவ்வாறு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

ஒவ்வொரு பொங்கல் திருநாள் அன்றும், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி ஒவ்வொரு தொகுதியாக சென்று பொங்கல் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம். அந்த வகையில், நடப்பாண்டில், மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி அருகே காரப்பட்டி பள்ளம் பகுதியில் சேலம் புறநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் பொங்கல் திருவிழா நேற்று நடந்தது. இந்த விழாவில் பழனிசாமி உரையாற்றுகையில்,

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. கிராமம் முதல் நகரம் வரை போதைப்பொருள் விற்பனை நடக்கிறது. பல்வேறு கொடுமைகள் நடக்கின்றன. சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க



காரணம், சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி. இதுவரை நியமிக்கப்படாதது தான்.

பொறுப்பு டி.ஜி.பியை நியமித்தார்கள், அவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்குச் சென்றதால், இன்னொரு பொறுப்பு டி.ஜி.பி நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியை நியமிக்க முடியாத அவல ஆட்சி நடக்கிறது. இப்படி இருந்தால் எப்படி சட்டம் ஒழுங்கு காப்பாற்றப் படும்? இந்த ஆட்சியில் எப்படி மக்களுக்கு நன்மை கிடைக்கும்?

அ.தி.மு.க. தலைமையில் பலம் பொருந்திய கூட்டணி அமைக்கப்பட்டுவிட்டது. தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கிற காங்கிரஸ் கை நழுவி போகப்போகிறது, தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் நிலைக்குமா என்ற கேள்வி வந்துவிட்டது, அ.தி.மு.கவை பொறுத்தவரை பலம் வாய்ந்த கூட்டணி. தேர்தல் நேரத்தில் தி.மு.கவை வீழ்த்துவோம்." என்று தெரிவித்துள்ளார்.

# தனது அமைதிக்கான நோபல் பரிசை ட்ரம்ப்புக்கு வழங்கினார் மச்சாடோ




வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ, கடந்த ஆண்டு தான் பெற்ற அமைதி நோபல் பரிசுக்கான பதக்கத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவில் ஜன நாயகம் மலர போராடிய மரியா கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப் பட்டது. அப்போதே அந்தப் பரிசை ட்ரம்ப்புக்கு அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப்பை வெள்ளை மாளிகையில் அவர் சந்தித்து பேசி னார். அப்போது தனது நோபல் பரிசை ட்ரம்ப்புக்கு அவர் வழங்கியுள்ளார்.

“அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வசம் அமைதிக்கான நோபல் பரிசை நான் வழங்கினேன். இது எங்கள் தேசத்தின் சுதந்திரத்துக்காக அவரது தனித்துவ அர்ப்பணிப்பிற்கான அங்கீ காரம்” என மரியா கொரினா மச்சாடோ தெரிவித்தார்.

வெள்ளை மாளிகைக்கு வெளியே பத்திரிகையாளர்களை அவர் சந்தித் தார். அப்போது அவரது ஆதரவாளர்கள் அங்கு திரண்டமை குறிப்பிடத்தக் கது.

நோபல் பரிசை தனக்கு வழங்கிய மச்சாடோவுக்கு சமூக வலைதள பதிவு மூலம் ட்ரம்ப் நன்றி சொல்லி யுள்ளார். ‘நோபல் பரிசை பெற்றவர் கள் அதை அடுத்தவருக்கு பகிரவோ, மாற்றவோ முடியாது’ என இந்த விவ காரம் தொடர்பாக நோபல் கொமிட்டி தெரிவித்துள்ளது.

“எனது 2 ஆவது ஆட்சி காலத்தில் 8 மாதத்தில் 8 போர்களை நிறுத்திய தால், நோபல் பரிசு பெற, வரலாற்றில் என்னைவிட தகுதியானவர் வேறு யாரும் இல்லை. ஒபாமாவுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு அதை பற்றி எதுவுமே தெரியாது. அவருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப்பட் டது? எதுவும் செய்யாமல் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றவுடனே, அவர் நோபல் பரிசு பெற்றார்” என்று அண்மையில் கூட நோபல் பரிசு குறித்து தனது விருப்பத்தை ட்ரம்ப் வெளிப்படுத்தி இருந்தார்.

“மரியா கொரினா மச்சாடோ அற் புதமானவர். பல்வேறு சவால்களை கடந்து வந்துள்ளார். அவர் பெற்ற அமைதிக்கான நோபல் பரிசை நான் மேற்கொண்ட பணிக்காக எனக்கு வழங்கினார். இதுவொரு பரஸ்பர மரியாதையின் மீதான அற்புத செய லாகும். மரியாவுக்கு நன்றி” என சமூக வலைதள பதிவில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



# தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு 5 ஆண்டுகள் சிறை

கடந்த 2024 ஆம் ஆண்டு தோல்வி யடைந்த இராணுவச் சட்ட அமுலாக் கம் மற்றும் அதனைத் தொடர்ந்த விசாரணை முடக்க விவகாரங்களில், தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் குற்ற வாளி என அறிவிக்கப்பட்டு, அவ ருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சியோல் மத்திய மாவட்ட நீதிமன் றம் இன்று இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது. இதேவேளை, தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

தென் கொரிய அரசு சட்டத்தரணி களால் அந்த நாட்டு நீதிமன்றத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிகார துஷ்பிரயோகம், தேசத்து ரோகம் மற்றும் ஜனநாயக அமைப் புகளைச் சீர்குலைக்க முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் மீது சுமத்தப்பட்டுள்ளன.சர்வாதி கார ஆட்சியை நிலை நிறுத்த அவர் முயற்சித்தார் என சட்டத்தரணிகள் குறிப்பிட்டிருந்தனர்.



# வெனிசுலாவின் 6 ஆவது எண்ணெய் கப்பலை கரீபியன் கடலில் கைப்பற்றியது அமெரிக்கா

வெனிசுவேலாவின் மசகு எண்ணெய் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் தீவிர முயற்சியின் ஒரு பகுதியாக, கரீபியன் கடலில் ஆறாவது எண்ணெய் கொள்கலன் கப்பலை அமெரிக்க இராணுவம் கைப்பற்றியுள்ளது.

'வெரோனிகா' எனப் பெயரிடப்பட்ட இந்தக் கப்பல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள தடை உத்தரவை மீறிச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதிகாலை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், அமெரிக்க கடற்படையினர் மற்றும் வீரர்கள் எந்தவித மோதலுமின்றி கப்பலைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

"வெனிசுவேலாவிலிருந்து முறையாகவும், சட்டபூர்வமாகவும் ஒருங்கிணைக்கப்படும் எண்ணெய் மட்டுமே இனி வெளியேற அனுமதிக்கப்படும்" என்று அமெரிக்காவின் சதர்ன் கமாண்ட் சமூக வலைத்தளத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

கயானா நாட்டின் கொடியுடன் பயணித்த வெரோனிகா கப்பல், முன்பு ரஷ்யாவில் பதிவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இது போன்ற 1,000 இற்கும் மேற்பட்ட நிழல் கப்பல்கள் தடை செய்யப்பட்ட எண்ணெய்யைக் கடத்துவதாக அமெரிக்கா கருதுகிறது.

இந்த மாதத் தொடக்கத்தில் வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் பரந்து விரிந்த எண்ணெய் வளங்களை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே, 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வெனிசுவேலா எண்ணெய்யை அமெரிக்கா முதல் முறையாக விற்பனை செய்து முடித்துள்ளது.

# டில்லியில் அதிகரிக்கும் காற்று மாசுபாடு; சுவாச நோய்களால் 9,000 பேர் உயிரிழப்பு



டில்லி அரசு வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டில் சுவாச நோய்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்திய தலைநகர் டில்லியில் அதிகரித்து வரும் காற்று மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய புள்ளிவிவரங்களை டில்லி அரசு வெளியிட்டுள்ளது.

டில்லி அரசு வெளியிட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான பிறப்பு மற்றும் இறப்பு தரவுகளின் படி, கடந்த ஆண்டில் மட்டும் சுவாசம் தொடர்பான நோய்களால் 9,211 பேர் உயிரிழந்துள்ளனர். இது 2023 ஆம் ஆண்டின் எண்ணிக்கையான 8,801 ஐ விட சுமார் 4.6 சதவீதம் அதிகமாகும்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் ஆஸ்மா, நிமோனியா, நுரையீரல் தொற்று மற்றும் காசநோய் போன்ற பாதிப்புகளுக்கு ஆளாகியிருந்தமை தெரியவந்துள்ளது. குறிப்பாக, டில்லியின் நச்சுக்காற்று மற்றும் குளிர்காலங்களில் நிலவும் கடுமையான பனி போன்றவை முதியவர்கள் மற்றும் குழந்தைகளின் நுரையீரலைக் கடுமையாகப் பாதிப்பதே இந்த உயிரிழப்புகள் அதிகரிக்க முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டில் டில்லியில் பதிவான மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 1.39 லட்சமாக உள்ளது. இதில் இதய நோய்கள் உள்ளிட்ட பாதிப்புகளால் 21,262 பேரும், தொற்று நோய்களால் 16,060 பேரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் ஆண்களின் எண்ணிக்கை (85,391) பெண்களை விட அதிகமாக உள்ளது. மேலும், பிறப்பு விகிதத்தின் அடிப்படையிலான பாலின விகிதம் 922 இல் இருந்து 920 ஆகக் குறைந்துள்ளது.


தினமும் சராசரியாக 381 இறப்புகள் பதிவாகும் நிலையில், சுவாச நோய்களால் ஏற்படும் மரணங்கள் ஆண்டுதோறும் ஏறுமுகத்தில் இருப்பது டில்லியின் பொதுச் சுகாதாரக் கட்டமைப்பிற்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்றும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை | 16/01/2026

## டொராண்டோவில் விமான சேவை பாதிப்பு

டொராண்டோவின் இரு விமான நிலையங்களும் பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ளன.

பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் பனியை அகற்றும் பணிகள் தொடர்ச்சி 02▶



# கனேடிய பிரதமர் சீனாவுக்கு விஜயம் ஜி ஜின்பிங்கைச் சந்தித்தார் கார்னி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள வர்த்தக வரிகள் மற்றும் வட அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்த நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில், கனடா தனது பொருளாதாரத்தை வேறுபடுத்தும் முயற்சியை மேற்கொள்கிறது.

இதன் நிமித்தம், கனேடிய பிரதமர் சீனாவுக்கு சென்றுள்ளார். கனேடிய பிரதமர் மார்க் கார்னி சீனா வுக்கு மேற்கொண்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாக இது கருதப்படுகிறது. 02▶

# கனேடியப் பிரஜை ஈரானில் உயிரிழப்பு: ஈரான் மீது கனடா கடும் குற்றச்சாட்டு





ஈரானிய அதிகாரிகளினால் கனேடியப் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகக் கனடா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்தச் சம்பவமானது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் மேலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் நேற்று தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் இச்சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், உயிரிழந்தவர் யார் அல்லது எப்போது இச்சம்பவம் நிகழ்ந்தது என்பது குறித்த மேலதிக விவரங்களை அவர் வெளியிடவில்லை.

ஈரானிய ஆட்சியாளர்களின் அடக்குமுறை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மக்கள் அமைதியான முறையில் போராடி வருகிறார்கள்.

மக்களின் குரலுக்குச் செவிசாய்ப்பதற்குப் பதிலாக, ஈரான் அரசு மனித உயிர்களைத் துச்சமாக மதித்துச் செயற்படுவதாக அனிதா ஆனந்த் கடுமையாகச் சாடியுள்ளார்.

மேலும், ஈரானில் நடைபெற்று வரும் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் போது போராட்டக்காரர்கள் மீது ஈரான் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் வன்முறைகளைச் சுட்டிக்காட்டியே கனடா இந்தத் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது அங்கு வசிக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பு குறித்துச் சர்வதேச நாடுகள் கவலை தெரிவித்து வரும் நிலையில், இந்த மரணம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# செயின்ட் ஜார்ஜ் வளாகத்தில் தீ வைத்த சந்தேகநபர் தேடுகின்றனர் பொலிஸார்

டொராண்டோ பல்கலைக்கழகத்தின் நகர மையமான செயின்ட் ஜார்ஜ் வளாகத்தில் தீ வைத்தார் என குற்றம் சாட்டப்பட்ட நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

டொராண்டோ பொலிஸாரின் தகவலின்படி, அந்த நபர் கடந்த புதன்கிழமை பிற்பகல் 2:40 மணி முதல் 4:45 மணி வரை செயின்ட் ஜார்ஜ் வளாகத்தில் உள்ள பல கட்டடங்களில் நுழைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அவர் பல இடங்களில் தீ வைத்து, சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், சந்தேக நபர் 42 வயதான யூரி க்ராப்லிவீ என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் நிலையான முகவரி இல்லாதவர் என கூறப்படுகிறது.




## டொராண்டோவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக நடைபெற்று வருவதாகவும், சில விமான சேவைகளில் தாமதம் ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பில்லி பிஷப் விமான நிலையத்திலும் காலை நேரங்களில் தாமதம் காணப்பட்டாலும், 8.30 மணிக்கு பின்னர் பெரும்பாலான விமானங்கள் நேரத்துக்கு புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் அனைவரும் விமான நிலையம் செல்லும் முன் தங்கள் விமான நிலையை சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பனிப்பொழிவு காரணமாக வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்புடுகின்றது.

இதுவரை 70 முதல் 80 வரை விபத்து அழைப்புகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

பனிப்பொறிகள் சாலைகளை சுத்தம் செய்ய வசதியாக டான் வேலி பார்க்வேயின் பெரும்பகுதி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முடிந்தவரை வீட்டிலேயே இருக்கவும், அவசரம் இல்லாவிட்டால் சாலைகளில் பயணிப்பதை தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கனேடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, அமெரிக்காவை மட்டுமே அதிகம் சார்ந்திருப்பதைக் குறைத்து, சீனாவின் புதிய வர்த்தக வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள பிரதமர் கார்னி திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில், சீன ஜனாதிபதியை பிரதமர் மார்க் கார்னி இன்று பீஜிங்கில் சந்தித்துப் பேசினார்.

இது சுமார் 8 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு கனேடிய பிரதமர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாகும்.

இந்த பயணத்தின் போது, வர்த்தக உறவு, வலு சக்தி, விவசாயம் மற்றும் விநியோகச் சங்கிலி போன்ற துறைகளில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# டொரோண்டோ பகுதியில் மேலும் பனி பெய்யக்கூடும்

பாரிய குளிர்கால புயலுக்குப் பிறகு டொரோண்டோவின் பெரும்பாலான இடங்களில் பனிப்பொழிவு தற்போது குறைந்து வருகிறது.

ஆனால், இன்று வெள்ளிக்கிழமை டொராண்டோவில் மீண்டும் ஒரு கடும் குளிர்கால வானிலை தாக்கம் ஏற்படக்கூடும் என டொராண்டோ வானிலை அறிவிப்பாளர் லின்ட்ஸே மோரிசன் தெரிவித்துள்ளார்.

மற்றொரு வானிலை அமைப்பு நகரத்தை நோக்கி நகர்ந்து வருவதால், வெள்ளிக்கிழமை டொராண்டோவில் கூடுதலாக 5 முதல் 7 சென்றி மீற்றர் வரை பனி பெய்யக்கூடும் என மோரிசன் தெரிவித்துள்ளார். வார இறுதியில் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்..

இந்த புயல் காரணமாக பல பாடசாலைகள் மூடப்பட்டன. ஒரு கட்டத்தில் டான் வாலி பார்க்வே (Don Valley Parkway) பல மணி நேரங்களுக்கு மூடப்பட்டது. “இன்றைய புயலைப் போல பெரிய தாக்கம் இல்லை, ஆனால் பனியின் அளவு மேலும் அதிகரிக்கும்,” என மோரிசன் கூறினார்.

நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட புயல், இந்த குளிர்காலத்தில் டொராண்டோ கண்ட மிக அதிகமான பனிப்பொழிவை ஏற்படுத்தியது. இது சமீப ஆண்டுகளில் நகரத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய 24 மணி நேர பனிப்பொழிவுகளில் ஒன்றாகும். இன்று வெள்ளிக்கிழமை பனிப் பொழிவு காலை தொடங்கி மாலை வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.





